செ.வெ.எண் 639 நாள் 8-08-08

# தமிழ்நாடு சமூக நல வாரியம்

திருமதி. ரொக்கையா
(எ) கவிஞர் சல்மா
தலைவி

'டிக்னிடி சென்டர்'
21, அப்துல் ரசாக் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-600 015.
தொலைபேசி-நிரி : 044-2434 0804
: 044-2434 9186
இ-மெயில் : tnsswb@yahoo.co.in

## பத்திரிக்கை செய்தி

தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாட தமிழக அரசு முடிவு செய்துள்ளது அறிந்ததே. தமிழ்நாட்டில் அரசியல் இலக்கிய மேடை பேச்சுக்கு முழு வடிவம் கொடுத்தவர் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரது நினைவைப் போற்றிட, தமிழ்நாடு சமூக நல வாரியம் வருகிற செப்டம்பர் 20ம் நாள் (20.09.08) ஒரு பேச்சுப் போட்டியை சென்னையில் நடத்துகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து கல்லூரி மாணவ மாணவிகளும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். போட்டியில் வெற்றியடைந்தவர்களுக்கு பரிசுகள் உண்டு. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு போட்டியின் தலைப்பு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | — | ரூ.10,000/- (ஒருவருக்கு) |
| இரண்டாம் பரிசு | — | ரூ. 5,000/- (இரண்டு பேருக்கு) |
| மூன்றாம் பரிசு | — | ரூ. 3,000/. ( ஒருவருக்கு) |
| ஆறுதல் பரிசு | — | ரூ. 1,000/- (5 பேருக்கு) |

மேற்கண்ட பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள கல்லூரி மாணவ மாணவிகள் தங்களது பெயர், முகவரி, பிறந்த தேதி, தற்போது படிக்கும் படிப்பு, கல்லூரியின் பெயர் மற்றும் முகவரி, தொலைபேசி மற்றும் கைபேசியின் எண்ணுடன் வெள்ளைத் தாளில் கீழ் குறித்த முகவரிக்கு ஆகஸ்ட் மாதம் 31ந் தேதிக்குள் கிடைக்கும்படியாக அனுப்ப வேண்டுகிறோம்.

திருமதி. சல்மா
தலைவி
தமிழ்நாடு சமூகநல வாரியம்
21, அப்துல் ரசாக் தெரு
சைதாப்பேட்டை
சென்னை 600 015

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9